# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1817/26 - 2013 ජූලි මස 02 වැනි අඟහරුවාදා - 2013.07.02

*1817/26 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 02 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்*

64 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 64 (1) ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் சந்திர ரூபசிங்ஹ குணவர்த்தன ஆகிய நான், பதுளை பிரதேச சபையின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற உடவெல நீர் விநியோகத் திட்டத்தின் நீர் விநியோக நடவடிக்கைகள் தொடர்பாக அச்சட்டத்தின் 63 (1) ஆம் பிரிவின் கீழ் என்னால் அனுமதியளிக்கப்பட்ட தன்னார்வ பரிமாற்ற திட்டத்தின் ஏற்பாடுகளை இக் கட்டளைமூலம் கீழ் காணப்படும் அட்டவணைக்கு உட்படுத்துகின்றேன்.

தினேஷ் சந்திர ரூபசிங்ஹ குணவர்த்தன,
நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர்.

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,
இல. 35, "லக்திய மெதுர",
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2013, மே 23.

**அட்டவணை**

61 (1) ஆவது பிரிவு - தன்னார்வ பரிமாற்ற திட்டத்தில் உள்ளடங்கும் விடயங்கள் :-

(அ) கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சகல அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களையும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு கையளித்து சபைக்குச் சொந்தமாக்குதல் வேண்டும். அதாவது :-

(i) பதுளை உடவெல நீர் விநியோக திட்டம் அமைந்துள்ள சகல நீர் மூலங்கள், நீர் தாங்கிக் கோபுரங்கள், அமுக்க கட்டுப்பாட்டு தாங்கி, பம்ப் செய்யும் இடத்தினை செயற்படுத்துவதற்கு மற்றும் பராமரிப்பதற்கு தேவையான சகல காணிகள், கட்டடங்கள், நீர்க் குழாய்கள், அனைத்து இயந்திரங்கள் மற்றும் மின் உபகரணங்களை பொருத்துவதற்கும், உபகரணங்களை பராமரிப்பதற்கும் தேவையான சகல உதிரிப் பாகங்களும் துணை உபகரணங்கள் மற்றும் பண்டகசாலைப் பொருட்கள் ;

(ii) பதுளை பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள நீர் பகிர்ந்தளிப்பு வலையமைப்பினை செயற்படுத்துவதற்கு மற்றும் பராமரிப்பதற்கு தேவையான நீர்க் குழாய் வழிகளின் வழியுரிமைகள், உதிரிப்பாகங்கள், துணை உபகரணங்கள் மற்றும் பண்டகசாலைப் பொருட்களுடன் அனைத்து பிரதான நீர்க் குழாயினை பகிர்ந்தளிக்கும் நீர்க்குழாய் வழிகள்.

(ஆ) மேற்கூறப்பட்ட சொத்து குறித்து திட்டமிடுதல், பொருத்துதல், நிர்மாணித்தல், செயற்படுத்துதல் மற்றும் பராமரித்தல் சம்பந்தமாக பதுளை பிரதேச சபை பிணைப்புற்றுள்ள ஒப்பந்தங்கள், சபையின் உரிமைகள், பொறுப்புக்கள் மற்றும் கடமைகள் அனைத்தும் சபையிடம் கையளிக்கப்படும்.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(இ) நீரை பாவித்தல் மற்றும் நீர் சேவையினை வழங்குதல் தொடர்பாக நீர் பாவனையாளர்களுடன் பதுளை பிரதேச சபை பிணைப்புற்றுள்ள சகல ஒப்பந்தங்களும், அந்த சேவையினை பெற்றுக்கொள்வது தொடர்பாக செலுத்த வேண்டியுள்ள கொடுப்பனவுகளும் சபையிடம் கையளிக்கப்படும்.

(ஈ) 359,940 ரூபா மதிப்புடைய பெறுமதிமிக்க இச்சொத்துகள் அரசாங்கத்தின் மூலம் நிதி உதவியடிப்படையில் சபைக்கு கையளிக்கப்படும்.

(உ) நீர் விநியோகம் சம்பந்தமாக நகர சபை ஏற்கனவே செய்து கொண்டுள்ள சகல ஒப்பந்தங்களும் சபையினால் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்படுவதுடன், ஒப்பந்தங்களை நிறைவடையச் செய்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

மேற்குறித்த விடயமானது இவ் அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் அமுலுக்கு வரும்.

*7-482*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.